# கடன் ஒப்பந்தம்

இந்த கடன் ஒப்பந்தம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மற்றும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில், 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் விதிகளின் கீழ் இணைக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பெனி மேலும் இந்திய ரிசர்வ் வங்கியில் பதிவு செய்யப்பட்டு பதிவு எண் [எண் - 13.01913] ஐக் கொண்டுள்ள, மற்றும் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் யூனிட் எண்.103, 1வது தளம், C&B சதுக்கம், சங்கம் வளாகம், CTS எண்.95 A, 127 அந்தேரி குர்லா சாலை, கிராமம் சகாலா, அந்தேரி (கிழக்கு), மும்பை- 400 059, தொலைபேசி

தொலைபேசி +91 22 67875300

CIN எண்: **L67190MH2008PLC178270**, வலைத்தளம்: www.sbfc.com

என்ற முகவரி மற்றும் இதர விவரங்கள் கொண்ட ஒரு வங்கி சாரா நிதி கம்பெனியான SBFC ஃபைனான்ஸ் லிமிடெட் (SBFC/கடன் வழங்குபவர்) (இதன் பின்னர் "கடன் வழங்குபவர்" என்று அழைக்கப்படும் இந்த சொற்கோவை, அதன் பொருள் அல்லது சூழலுக்கு முரணாக இருந்தால் தவிர, அதன் உரிமை பெறும் வாரிசுகள் மற்றும் உரிமை அளிக்கப்பட்டவர்களையும் குறிக்கும் மற்றும் சேர்க்கும்) முதல் தரப்பினராகவும்;

மற்றும்

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்/கள் (இனிமேல் அதன் பொருள் அல்லது சூழலுக்கு முரணாக இருந்தால் தவிர, "கடன் பெறுபவர்" என்று குறிப்பிடப்படும்/ஒட்டுமொத்தமாகக் குறிப்பிடப்படும் ஏற்றுக்கொண்ட இந்த சொற்கோவையானது, அவர்/அவள், அவர்களின் அந்தந்த வாரிசுகள், நிறைவேற்றுபவர்கள், நிர்வாகிகள், சட்ட பிரதிநிதி (அந்த/ ஒரு கடன் பெறுபவர் தனிநபர்/ஒரே உரிமையாளர் என்றால்),

பின்வருநர்கள் (அந்த/ ஒரு கடன் பெறுபவர் கம்பெனிகள் சட்டம், 1956 இன் கீழ் இணைக்கப்பட்ட கம்பெனி அல்லது வேறு ஏதேனும் கார்ப்பரேட் அமைப்பு என்றால்) நிறுவனத்தில் அவ்வப்போது இருக்கும் பங்குதாரர்(கள்), அவர்களில் உயிருடன் இருப்பவர்(கள்) மற்றும் வாரிசுகள், நிறைவேற்றுபவர்கள், நிர்வாகிகள், சட்ட பிரதிநிதி மற்றும் கூட்டாளரின் பின்வருநர்கள் (அந்த/ ஒரு கடன் பெறுபவர் ஒரு கூட்டாண்மை நிறுவனமாக இருந்தால்), கூறப்பட்ட இந்து பிரிவுபடாத குடும்பத்தின் உறுப்பினர்கள் அல்லது தற்போதைய உறுப்பினர் மற்றும் அவர்களின் அந்தந்த வாரிசுகள், நிறைவேற்றுநர்கள், நிர்வாகிகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, பின்வருநர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட அதிகாரம் அளிக்கபட்டவர்கள் (கடன் பெறுபவர் ஒரு இந்து பிரிவுபடாத குடும்பம் என்றால்) மற்றொரு தரப்பினாராகவும் "இவர்களுக்கிடையில்" செய்யப்படும் ("ஒப்பந்தம்") ;

இதன்படி:

a) கடன் பெறுபவர், இங்குள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை கடன்/நிதி உதவியாக வேண்டி கடன் வழங்குபவரை அணுகியுள்ளார்.

b) கடன் வழங்குபவர், கடன் பெறுபவரால் வழங்கப்பட்ட மற்றும் செய்யப்பட்ட விவர அறிக்கைகள், உத்தரவாதங்கள், வரைமொழிகள் மற்றும் பொறுப்பேற்புகளை நம்பி, கடன் பெறுபவரின் கோரிக்கையை பரிசீலித்து, இங்கு கூறப்படும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் கடனளிக்கவும் மற்றும் பிணையத்தின் பேரில் அதற்கான பணமளிக்கவும் ஒப்புக்கொண்டுள்ளார்.

c) கடன் வழங்குபவர் கடன் பெறுபவருக்கு வழங்க முன்மொழியப்பட்ட கடன் மற்றும் அது தொடர்பான வேறு சில விஷயங்கள் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை இங்குள்ள தரப்பினர் பதிவு செய்ய விரும்புகிறார்கள்.

பிரிவு -1: விளக்கம்

1.1 சூழலுக்குப் முரணாக இல்லாத வரை, இந்த ஒப்பந்தத்தில் பயன்படுத்தப்படும் பின்வரும் சொற்கள் முறையே அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட அர்த்தங்களைக் கொண்டிருக்கும்:

(a) "கடன் தீர்ப்பு அட்டவணை" என்பது இந்த ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்ட கடன் தீர்ப்பு அட்டவணையைக் குறிக்கிறது, மேலும் கடன் வழங்குபவரால் அவ்வப்போது இணைக்கப்படும் அல்லது பரிந்துரைக்கப்படும் அனைத்து கடன் கடன் தீர்ப்பு அட்டவணை(களையும்) உள்ளடக்கியது.

(b) "கடன் பெறுபவர்" என்பது அட்டவணையில் கடன் பெறுபவராக விவரிக்கப்பட்டுள்ள நபரைக் குறிக்கிறது, மேலும் அதில் பெயர் குறிப்பிடப்பட்ட ஒரு இணை கடன் பெறுபவரையும் உள்ளடக்கியது.

(c) "சமப்படுத்திய மாதாந்திர தவணை" அல்லது ("EMI") என்பது, கடன் தவணையை கடனாகக் குறைக்கும் நோக்கத்திற்காக, கடன் தவணை அட்டவணையின்படி அல்லது அவ்வப்போது இணைக்கப்படும் வகையில், கடனைத் திருப்பிச் செலுத்தும் நோக்கத்திற்காக, கடன் தவணைக்காலம் முழுவதிலும் மாதந்தோறும் செலுத்த வேண்டிய தவணையைக் குறிக்கிறது. (ii) கடன் வழங்குபவரால் வழங்கப்படும் சுழலும் கடன் வசதி விஷயத்தில், கடன் வழங்குபவரால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் தொடர்புடைய பயன்பாட்டிற்கான திருப்பிச் செலுத்தும் அட்டவணையின்படி செலுத்த வேண்டிய தவணையைக் குறிக்கிறது.

(d) "தவறுகை நிகழ்வு" என்பது பின்வரும் நிகழ்வுகளில் ஏதேனும் ஒன்றின் நிகழ்வைக் குறிக்கிறது:

i) நிலுவைத்தொகைகளுக்கு பணம் செலுத்துவது: இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் மற்றும்/அல்லது கடன் பெறுபவருக்கும் கடன் வழங்குபவருக்கும் இடையில் இனிமேல் செயல்படுத்தப்படக்கூடிய அல்லது நடைமுறையில் இருக்கும் வேறு ஏதேனும் ஒப்பந்தம்(கள்)/ஆவணங்கள்(கள்) ஆகியவற்றின் அடிப்படையில், EMI-கள் அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதியை செலுத்துவதில் மற்றும்/அல்லது கடன் வழங்குபவருக்கு செலுத்த வேண்டிய வேறு ஏதேனும் தொகைகளை செலுத்துவதில் ஏதேனும் தவறுகை நேர்ந்தால்;

ii) வரைமொழிகளின் செயல்திறன்: இந்த ஒப்பந்தம் அல்லது கடன் அல்லது வேறு ஏதேனும் கடன் தொடர்பாக கடன் பெறுபவருக்கும் கடன் வழங்குபவருக்கும் இடையிலான வேறு எந்த ஒப்பந்தம்(களின்) கீழ் கடன் பெறுபவரின் தரப்பில் வேறு ஏதேனும் வரைமொழி(கள்), நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தங்களைச் செயல்படுத்துவதில் தவறுகை நேர்ந்தால்;

iii) தவறாக வழிநடத்தும் தகவல் வழங்குவது: கடன் ஒப்பந்தத்தில் கடன் வாங்குபவருக்கு கடன் பெறுபவர் அளிக்கும் எந்தவொரு தகவலும் அல்லது மற்றபடி பிரிவு 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பொருள் விஷயத்திலும் அல்லது எந்தவொரு விவர அறிக்கை அல்லது உத்தரவாதமும் தவறாக வழிநடத்துகிறது அல்லது தவறானது என்று கண்டறியப்பட்டால்;

iv) பிணையத்தின மதிப்பு குறைவது: கடனுக்கான பிணையம் உருவாக்கப்பட்ட எந்தவொரு சொத்தின் மதிப்பும் குறைந்து, கடன் வழங்குபவரின் கருத்தில் கூடுதல் பிணையம் வழங்கப்பட வேண்டும், ஆனால் அத்தகைய பிணையம் வழங்கப்படவில்லை என்றால்;

v) சொத்தை விற்பனை செய்வது அல்லது பிறருக்கு கொடுப்பது: சொத்து அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதி வாடகைக்கு விடப்பட்டால், குத்தகைக்கு விடப்பட்டால் மற்றும் உரிமத்தில் வழங்கப்பட்டால், பிறருக்கு கொடுக்கபட்டால், அடமானம் வைக்கபட்டால், வில்லங்கம் ஏற்படுத்தினால் அல்லது வேறு எந்த வகையிலும் உரிமைமாற்றம் செய்யப்பட்டால்;

vi) சொத்தை ஜப்தி செய்வது அல்லது பற்றாணை: சொத்து அல்லது

அதன் எந்தப் பகுதியின் மீதும் ஒரு ஜப்தி செய்வது அல்லது பற்றாணை விதிக்கப்பட்டால் மற்றும் / அல்லது சொத்துக்கு எதிராக கடன் பெறுபவரிடமிருந்து ஏதேனும் நிலுவைத் தொகையை வசூலிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அல்லது தொடங்கப்பட்டால்;

vii) தகவல்/ஆவணங்களை வழங்கத் தவறுவது: கடன் வழங்குபவருக்குத் தேவைப்படும் எந்தவொரு தகவலையும் அல்லது ஆவணங்களையும் கடன் பெறுபவர் வழங்கத் தவறினால்;

viii) தவறுகை நிகழ்வைத் தெரிவிக்கத் தவறுவது: கடன் பெறுபவர் ஏதேனும் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் நேர்ந்த தவறுகை நிகழ்வைப் பற்றியோ அல்லது அறிவிப்பு அல்லது நேரம் காலாவதியான பிறகு அல்லது இரண்டுக்கும் பிறகு கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறிய நிகழ்வைப் பற்றியோ கடன் வழங்குபவருக்குத் தெரிவிக்கத் தவறினால்;

ix) காசோலை/ ECS/ SI/ ACH/ NACH க்கு பணம் செலுத்தாமை/ புதுப்பிக்காமை: இந்த ஒப்பந்தத்தின் காலப்பகுதியில், EMI உட்பட ஆனால் அவை மட்டும் என்ற வரையறை அல்லாமல், எந்தவொரு பணம் செலுத்துவதற்கும் ஒரு காசோலை/ ECS/ 51/ ACH/ NACH, எந்தவொரு காரணத்திற்காகவும், புதுப்பிக்கப்படாமல், பணம் அளிக்கப்பட்டால் அல்லது வேறுவிதமாக இருந்தால்;

x) காசோலைகள்/ECS/51/ACH/NACH வழங்காதது: கடன் பெறுபவர் கடன் விதிமுறைகளுக்கு இணங்க அல்லது கடன் வழங்குபவர் கோரும் போது பின் தேதியிட்ட காசோலைகள்/ECS/51/ACH/NACH ஆகியவற்றை வழங்கத் தவறினால்;

xi) பேலன்ஸ் உறுதிப்படுத்தலை வழங்கத் தவறுவது: கடன் வழங்குபவரிடமிருந்து அறிக்கையைப் பெற்ற 10 (பத்து) நாட்களுக்குள் கடன் பெறுபவர் சுட்டிக்காட்டிய அத்தகைய அறிக்கையைக் கணக்கிடுவதில் எந்தவொரு வெளிப்படையான பிழையும் இல்லாத நிலையில், கடன் வழங்குபவர் தேவைப்படும்போது கடன் பேலன்ஸ் உறுதிப்படுத்தலில் கையொப்பமிட்டு கடன் வழங்குபவரிடம் வழங்கத் தவறினால்;

xii) பிணையம் செயல்படுத்த முடியாததாகி விடுவது: கடனுக்கான எந்தவொரு பிணையம் அல்லது உத்தரவாதமும் பயனற்றதாகிவிட்டால் அல்லது கடன் பெறுபவர் அல்லது வேறு எந்த நபரால் மறுத்துக் கூறப்பட்டால்;

xiii) விவாகரத்து அல்லது இறப்பு: கடன் பெறுபவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கடன் பெறுபவர்களுக்கு கடன் வழங்கப்பட்டிருந்தால், கடன் பெறுபவர்களில் யாராவது ஒருவர் விவாகரத்து பெற்றாலோ அல்லது இறந்துவிட்டாலோ;

xiv) குறுக்கு தவறுதல்: கடன் வழங்குபவர் கடன் பெறுபவருக்கு வழங்கிய வேறு ஏதேனும் கடன் அல்லது வசதியின் விதிமுறைகள், வரைமொழிகள் மற்றும் நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் கடன் பெறுபவர் தவறினால்;

xv) இறுதிப் பயன்பாட்டு அறிக்கையை வழங்கத் தவறுவது: கடன் வழங்குபவரிடமிருந்து அத்தகைய கோரிக்கையைப் பெற்ற 10 (பத்து) நாட்களுக்குள், கடன் வழங்குபவருக்குத் தேவைப்படும்போது, கடனின் விரிவான இறுதிப் பயன்பாட்டு அறிக்கையை கடன் பெறுபவர் வழங்கத் தவறினால்;

xvi) நிறுவன அமைப்பு ETC இல் மாற்றம்: கடன் பெறுபவரின் பங்கு மூலதனத்தின் அமைப்பு, மேலாண்மை அல்லது ஏற்கனவே உள்ள உரிமை அல்லது கட்டுப்பாட்டில் ஏதேனும் மாற்றம் இருந்தால் (கடன் பெறுபவர் ஒரு கம்பெனி அல்லது நிறுவனமாக இருந்தால்), அது இந்த ஒப்பந்தத்திற்கு இணங்க கடன் வழங்குபவருக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை என்றால்; மற்றும்

xvii) திவால் நிலை: கடன் பெறுபவர் ஒரு தனிநபராக இருந்தால், கடன் பெறுபவர் திவால்நிலைக்கான செயலைச் செய்தால் அல்லது தன்னை திவாலானவராக அறிவிக்க விண்ணப்பம் செய்தால் அல்லது கடன் பெறுபவருக்கு எதிராக அவரை ஒரு திவாலானவராக பிரகடனப்படுத்தி ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் / கடன் பெறுபவர் ஒரு கூட்டாண்மை நிறுவனமாக இருந்தால், கடன் பெறுபவர் கலைக்கப்பட்டால் அல்லது அதற்கு அல்லது அதன் கூட்டாளர்களுக்கு கலைப்பு அறிவிப்பு வழங்கப்பட்டால் அல்லது கடன் பெறுபவர் அல்லது அதன் கூட்டாளர்கள் எவரேனும் திவாலான செயலைச் செய்தால் அல்லது திவாலானவராக அறிவிக்க விண்ணப்பம் செய்தால் அல்லது அதை அல்லது அவர்களில் எவரையேனும் திவாலானவராக அறிவிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் / கடன் பெறுபவர் (vi) ஒரு கம்பெனி ஆக இருந்தால், கடன் பெறுபவர் கம்பெனிகள் சட்டம், 1956 இன் பிரிவு 434 இன் பொருளுக்குள் தனது கடன்களை செலுத்த முடியாவிட்டால் அல்லது கடன் பெறுபவரை மூடுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அல்லது அதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான எந்தவொரு மனுவும் தாக்கல் செய்யப்பட்டால் அல்லது முடிவுக்குக் கொண்டுவருவதற்கான எந்தவொரு உத்தரவும் கடன் பெறுபவருக்கு எதிராக அல்லது கடன் பெறுபவரின் எந்தவொரு சொத்து அல்லது எஸ்டேட் தொடர்பாக ஒரு கலைப்பாளர் நியமிக்கப்பட்டால் அல்லது திவால்நிலை மற்றும் திவால்நிலை விதிகளின் கீழ் கடன் பெறுபவர் திவாலானவராக அறிவிக்கப்பட்டால்.

xviii) காப்பீடு பெறத் தவறுதல்: இந்த ஒப்பந்தத்தின்படி கடன் பெறுபவர் தனது சொத்துக்களுடன் தொடர்புடைய காப்பீட்டுக் கொள்கைகளைப் பெற்று பராமரிக்கத் தவறுகிறார். எந்தவொரு காப்பீட்டின் கீழும் அதன் கடமைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிறைவேற்ற கடன் பெறுபவரால் ஒப்பந்தம் செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட எந்தவொரு காப்பீடும், அது நடைமுறையில் இருக்க வேண்டியிருக்கும் போது அல்லது எந்தவொரு காப்பீடும் தவிர்க்கப்படும் போது, அது நடைமுறையில் இருக்க வேண்டிய போது எந்த நேரத்திலும் 15 (பதினைந்து) காலண்டர் நாட்களுக்கு மேல் முழு அமலிலும் விளைவிலும் இல்லாமல் இருப்பது அல்லது முடிந்து போவது அல்லது ஏதேனும் காப்பீடு தவிர்க்கப்படும்போது, அல்லது எந்தவொரு காப்பீடு அளிப்பவர் அல்லது மறு காப்பீடு அளிப்பவர் ஏதேனும் காப்பீட்டை தவிர்ப்பது அல்லது இடைநீக்கம் செய்வது அல்லது அல்லது எந்தவொரு காப்பீட்டையும் அல்லது அதன் கீழ் எந்தவொரு கோரிக்கையையும் தவிர்க்க அல்லது நிறுத்தி வைக்க உரிமை பெறுவது அல்லது வேறு எந்த காப்பீட்டின் கீழும் ஆதன் பொறுப்பைக் குறைப்பது அல்லது எந்தவொரு காப்பீட்டின் எந்தவொரு காப்பீட்டாளரும் கட்டுப்படுத்தப்படாதபோது, அல்லது கட்டுப்படுத்தப்படுவதை நிறுத்திவைக்கும்போது.

xix) சட்டத்துக்கு புறம்பான தன்மை: இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் பெறுபவர் தனது எந்தவொரு கடமைகளையும் நிறைவேற்றுவது சட்டத்துக்கு புறம்பாக உள்ளது அல்லது சட்டத்துக்கு புறம்பானதாக மாறுவது.

xx) சட்டத்தில் மாற்றம்: கடன் பெறுபவருக்குப் பொருந்தக்கூடிய எந்தவொரு சட்டம் மற்றும்/அல்லது ஒழுங்குமுறையிலும் ஏற்படும் எந்தவொரு மாற்றமும், கடன் வழங்குபவரின் கருத்தில், கடன் பெறுபவரின் வருவாயில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துவது.

(e) "வட்டி" அல்லது "வட்டி விகிதம்" என்பது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் வழங்குபவர் கடன் பெறுபவருக்கு கடன்

கொடுக்க ஒப்புக்கொண்ட விகிதத்தைக் குறிக்கிறது, மேலும் இது மிதவை விகிதம் அல்லது நிலையான விகிதம் அல்லது இரட்டை விகித கடனாக இருக்கும்

(f) "கடன்" என்பது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் பெறுபவருக்கு கடன் வழங்குபவர் வழங்கிய நிதி உதவித் தொகையைக் குறிக்கிறது, மேலும் இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் பெறுபவர் கடன் வழங்குபவருக்கு செலுத்த வேண்டிய அசல் தொகை, வட்டி, கூடுதல் வட்டி மற்றும்/அல்லது வேறு ஏதேனும் தொகையை உள்ளடக்கியது.

(g) "கடன் விண்ணப்பம்" என்பது கடன் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்காக கடன் வழங்குபவரிடமிருந்து நிதி வசதியைப் பெறுவதற்காக கடன் பெறுபவர் சமர்ப்பித்த துணை ஆவணங்களுடன் கூடிய விண்ணப்பத்தைக் குறிக்கிறது.

(h) "நபர்" என்பது ஒரு தனிநபர், கூட்டாண்மை நிறுவனம், கம்பெனி, டிரஸ்ட், சொசைட்டி மற்றும் நபர்களின் சங்கத்தை உள்ளடக்கியது.

(i) "சொத்து" என்பது அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடியிருப்பு அல்லது வணிக ரீதியான அசையாச் சொத்து அல்லது கடனைத் திருப்பிச் செலுத்துவதை உறுதி செய்ய கடன் வழங்குபவருக்கு பிணையாக வழங்கப்பட்ட வேறு ஏதேனும் சொத்து என்பதைக் குறிக்கிறது. இதில் பின்வருவன அடங்கும்:

- ஒரு ஃபிளாட்டைப் பொறுத்தவரை, முழு கட்டப்பட்ட பகுதியும், ஃபிளாட் கட்டப்பட்ட அல்லது கட்டிடம் கட்டப்பட்டதன் கீழ் உள்ள பொதுவான பகுதிகள் மற்றும் நிலத்தில் விகிதாசார பங்கும்; அல்லது
- ஒரு தனிப்பட்ட வீட்டைப் பொறுத்தவரை, வீடு மற்றும் வீடு கட்டப்பட்டுள்ள முழு நிலமும்;

(j) "முன்கூட்டியே செலுத்துதல்" என்பது இந்த ஒப்பந்தத்தின் பிரிவு 2.6 இன் விதிமுறைகளுக்கு உட்பட்டு எந்த நேரத்திலும் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ கடனைத் திருப்பிச் செலுத்துவதாகும்,

(k) "அட்டவணை" என்பது இந்த ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணையைக் குறிக்கிறது.

(l) இனிமேல் "ECS" என்று குறிப்பிடப்படும் "மின்னணு தீர்வு சேவை" (டெபிட் கிளியரிங்) ஆனது இந்திய ரிசர்வ் வங்கியால் அறிவிக்கப்பட்ட டெபிட் கிளியரிங் சேவையைக் குறிக்கும், மேலும் குறிப்பாக ஒப்பந்தத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சமப்படுத்தப்பட்ட மாதாந்திர தவணைகளை செலுத்துவதற்கு இதில் பங்கேற்க வசதியாக கடன் பெறுபவரால் எழுத்துப்பூர்வமாக ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

(m) இனிமேல் "SI" என்று குறிப்பிடப்படும் "நிலையான வழிமுறைகள்" என்பது, ஒப்பந்தத்தின் அட்டவணையில் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக கடன் வழங்குபவருக்குச் செலுத்த வேண்டிய தொகைக்கு, சமப்படுத்தப்பட்ட மாதாந்திர தவணைகளுக்குச் சமமான தொகையை, ஒரு வங்கியில் பராமரிக்கப்படும் கடன் பெறுபவரின் கணக்கில் இருந்து பற்று வைக்க கடன் பெறுபவர் தனது வங்கிக்கு வழங்கும் எழுத்துப்பூர்வ அறிவுறுத்தல்களைக் குறிக்கும்.

(n) "ஆட்டோமேட்டட் கிளியரிங் ஹவுஸ்" இனிமேல் "ACH" என்று குறிப்பிடப்படுவது, சமப்படுத்தப்பட்ட மாதாந்திர தவணைகளை செலுத்துவதற்கு கடன் பெறுபவர் எழுத்துப்பூர்வமாக ஒப்புதல் அளித்த ஆணைப் படிவம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியால் வரையறுக்கப்பட்ட மற்றும் தேவைப்படும் அல்லது அறிவிக்கப்பட்ட வேறு ஏதேனும் படிவங்கள் மூலம் குறிப்பாக, ஒப்பந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் பெறுபவரால் வழங்கப்பட்ட எழுத்துப்பூர்வ அறிவுறுத்தல்களைக் குறிக்கும்.

(o) இனிமேல் "NACH" என்று குறிப்பிடப்படும் "நேஷனல் ஆட்டோமேட்டட் கிளியரிங் ஹவுஸ்" என்பது, இந்திய ரிசர்வ் வங்கியால் வரையறுக்கப்பட்டு தேவைப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட ஆணை படிவம் அல்லது வேறு ஏதேனும் படிவங்கள் மூலம் கடன் பெறுபவர் வழங்கும் எழுத்துப்பூர்வ அறிவுறுத்தல்களைக் குறிக்கும், குறிப்பாக ஒப்பந்தத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சமப்படுத்தப்பட்ட மாதாந்திர தவணைகளை செலுத்துவதற்கு வசதியாக கடன் பெறுபவர் எழுத்துப்பூர்வமாக ஒப்புதல் அளித்த பங்கேற்பு இதில் அடங்கும்.

(p) "பயன்பாடு" என்பது ஒப்பந்தத்தின் பிரிவு 2.1 (b) இல் குறிப்பிடப்பட்டுள்ள பொருளைக் கொண்டுள்ளது.

(q) பின்வருவன தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தொடர்பு வழிமுறைகள்:

(A) கடன் பெறுபவர், என்பதன் பொருள்:

i) கடன் விண்ணப்பப் படிவத்தில் வழங்கப்பட்டுள்ளபடி, கடன் பெறுபவரின் பதிவுசெய்யப்பட்ட மொபைல்/லேண்ட்லைன் எண்ணுக்கு அனுப்பப்படும் தொலைபேசி அழைப்பு அல்லது குறுஞ்செய்தி அல்லது

ii) கடன் விண்ணப்பப் படிவத்தில் வழங்கப்பட்டுள்ளபடி கடன் வாங்கியவரின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு மின்னஞ்சல் அல்லது

iii) கடன் பெறுபவரின் பதிவு செய்யப்பட்ட அஞ்சல் முகவரிக்கு கூரியர்/தபால் மூலம் அனுப்பப்பட்ட எழுத்துப்பூர்வ அறிவிப்பு அல்லது

iv) சாட்பாட், பிட்லி, வாட்ஸ்அப் தகவல் தொடர்பு போன்ற சமூக ஊடகங்கள் மற்றும் / அல்லது வேறு எந்த மின்னணு முறை மூலமும் அனுப்பப்படும் சோதனை செய்தி மற்றும் / அல்லது

v) கடன் வழங்குபவரால் அவரது வலைத்தளத்தில் அறிவிப்பு

(B) கடன் வழங்குபவர், இதன் பொருள்:

i) வலைத்தளத்தில் வழங்கப்பட்டுள்ளபடி கடன் வழங்குபவரது நியமிக்கப்பட்ட வாடிக்கையாளர் சேவை எண்ணில் பெறப்பட்ட தொலைபேசி அழைப்பு அல்லது

ii) கடன் வழங்குபவரின் நியமிக்கப்பட்ட வாடிக்கையாளர் சேவை மின்னஞ்சல் முகவரியில் பெறப்பட்ட மின்னஞ்சல்

(r) "இரட்டை விகிதக் கடன்" என்பது இந்த ஒப்பந்தத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நிலையான விகித தவணைக் காலத்திற்கு நிலையான வட்டி விகிதத்தைக் கொண்ட வருடாந்திர வட்டி விகிதத்தைக் கொண்ட கடனைக் குறிக்கும், அதன் பிறகு இந்த ஒப்பந்தத்தின் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளபடி மிதவை விகித தவணைக்காலத்திற்கு SBFC PLR உடன் இணைக்கப்படும் மிதக்கும் வட்டி விகிதம் ஆகும்.

(s) இரட்டை விகிதக் கடனைப் பெறும் கடன் பெறுபவருக்கு "நிலையான விகித தவணைக் காலம்" என்பது கடன் தவணைக் காலத்தின் ஒரு பகுதியைக் குறிக்கும், இதன் போது கடனுக்கு நிலையான வட்டி விகிதம் பொருந்தும் மற்றும் அது இந்த ஒப்பந்தத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(t) இரட்டை விகிதக் கடனைப் பெறும் கடன் பெறுபவருக்கு "மிதவை விகித தவணைக் காலம்" என்பது கடன் தவணைக் காலத்தின் ஒரு பகுதியைக் குறிக்கும், இதில் கடனுக்கு மிதவை வட்டி விகிதம் பொருந்தும், இது நிலையான விகித தவணைக் காலம் முடிந்த பிறகு தொடங்கி இந்த ஒப்பந்தத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்கும்.

(u) இரட்டை விகிதக் கடனைப் பெற்றால்

a) நிலையான வட்டி விகித தவணைக் காலத்திற்கு, ஒப்பந்தத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நிலையான வட்டி விகிதம்

b) மிதவை விகித தவணைக் காலத்திற்கு, இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் வாங்குபவர் பெற்ற கடனைப் பொறுத்தவரை, மிதவை விகித தவணைக் காலம் தொடங்கும் தேதியில் பொருந்தும் அட்டவணை மற்றும் SBFC PLR இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பரவலின் கூட்டுத்தொகை. இந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட தேதிக்கான SBFC PLR ஆனது, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி உள்ளது.

1.2 இந்த ஒப்பந்தத்தில், சூழலுக்கு வேறுவிதமாகத் தேவைப்பட்டால் தவிர,

(a) பிரிவுகளுக்கான குறிப்புகள் இந்த ஒப்பந்தத்தின் பிரிவுகளுக்கான குறிப்புகளாகக் கருதப்பட வேண்டும்;

(b) அட்டவணைக்கான குறிப்புகள், இந்த ஒப்பந்தத்திற்கான அட்டவணை மற்றும் தரப்பினரால் அவ்வப்போது செயல்படுத்தப்படும் எந்தவொரு துணை அல்லது கூடுதல் அட்டவணைக்கான குறிப்புகளாகக் கருதப்பட வேண்டும். மேலும், இந்த ஒப்பந்தத்திற்கான குறிப்புகளில்

அவ்வப்போது இணைக்கப்பட்டுள்ள அத்தகைய அனைத்து அட்டவணைகளுக்கான குறிப்புகளும் அடங்கும்;

(c) ஒரு நபரைப் பற்றிய குறிப்புகள், ஒரு தனிநபர், நிறுவனம், கடன் வழங்குபவர் அல்லது இணைக்கப்பட்ட அல்லது அவ்வாறு அல்லாத, பிற அமைப்பைப் பற்றிய குறிப்புகளை உள்ளடக்கியதாகக் கருதப்படும்;

(d) "வணிக நாள்" என்பதற்கான குறிப்புகள், மும்பையில் வங்கிகள் பொதுவாக வணிகத்திற்காக திறந்திருக்கும் ஒரு நாளை (பொது விடுமுறை அல்லது ஞாயிற்றுக்கிழமை தவிர) குறிப்பாகக் கருதப்படும்;

(e) ஒரு "மாதம்" என்பதற்கான குறிப்புகள், ஒரு காலண்டர் மாதத்தின் ஒரு நாளில் தொடங்கி அடுத்த காலண்டர் மாதத்தில் எண் ரீதியாக தொடர்புடைய நாளில் முடிவடையும் காலத்தைக் குறிப்பதாகக் கருதப்படும். அத்தகைய கால அளவு வணிக நாள் அல்லாத ஒரு நாளில் முடிவடையும் பட்சத்தில், அந்த நாள் அது வேறுவிதமாக முடிந்திருக்கக்கூடிய காலண்டர் மாதத்தில் வராவிட்டால், அடுத்த அடுத்த வணிக நாளில் அது முடிவடையும், அப்படியானால் அது உடனடியாக முந்தைய வணிக நாளில் முடிவடையும்; ஆனால், ஒரு காலகட்டம் ஒரு காலண்டர் மாதத்தின் கடைசி வணிக நாளில் தொடங்கினால், அதற்கு அடுத்த காலண்டர் மாதத்தில் எண்ணியல் ரீதியாக தொடர்புடைய வணிக நாள் இல்லை என்றால், அந்தக் காலம் அந்த பிந்தைய காலண்டர் மாதத்தின் கடைசி வணிக நாளில் முடிவடையும்; மற்றும்

(f) பன்மையை குறிக்கும் சொற்கள் ஒருமையையும், பன்மையையும் உள்ளடக்கியிருக்கும்.

1.3 பிரிவுத் தலைப்புகள் வசதிக்காக மட்டுமே செருகப்படுகின்றன, மேலும் அவை அதன் ஷரத்தின் விளக்கத்தைப் பாதிக்காது.

பிரிவு- 2: கடன், வட்டி, கடன்தீர்ப்பு, வரிகள் & முன்கூட்டிய செலுத்துதல்

2.1 கடன்:

(a) கடன் பெறுபவர் கடன் வழங்குபவரிடமிருந்து கடன் வாங்க ஒப்புக்கொள்கிறார், மேலும் கடன் வழங்குபவர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை கடன் பெறுபவருக்குக் கடன் கொடுக்க ஒப்புக்கொள்கிறார்.

(b) கடன் பொதுவாக ஒரே மொத்த தொகையாக வழங்கப்படும். கீழே உள்ள ரசீதில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வழங்கப்பட்ட கடனைப் பெற்றதாக கடன் பெறுபவர் இதன் மூலம் ஒப்புகை அளிக்கிறார். இது தொடர்பாக கடன் வழங்குபவரின் முடிவே இறுதியானது, முடிவானது மற்றும் அது கடன் பெறுபவரைக் கட்டுப்படுத்தும். பணம் வழங்கும் காசோலை/வரைவோலையின் தேதி பணம் வழங்கப்பட்ட தேதியாகக் கருதப்படும். ஒரு சுழலும் வசதி இருக்கும் பட்சத்தில், கடன் பெறுபவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பயன்பாடுகளில் ("பயன்பாடுகள்") கடனின் அசல் தொகையை வழங்குமாறு கடன் வழங்குபவரிடம் கோரலாம். ஆனால், அது அனைத்து பயன்பாடுகளின் மொத்தம் கடனின் அசல் தொகையையோ அல்லது கடன் வழங்குபவரால் பரிந்துரைக்கப்பட்ட அத்தகைய பிற தொகையையோ ஒருபோதும் மீறக்கூடாது. ஒவ்வொரு பயன்பாட்டிற்கும், கடன் பெறுபவர் கடன் வழங்குபவருக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய படிவத்திலும் முறையிலும் பயன்பாட்டு கோரிக்கையைச் சமர்ப்பிப்பார். இந்த ஒப்பந்தத்தின் விதிகளின்படி கடன் பெறுபவர் கடன் வழங்குபவருக்குத் திருப்பிச் செலுத்தும் எந்தவொரு பயன்பாட்டையும்(களையும்) கடன் பெறுபவர் பயன்படுத்திக் கொள்ளலாம். கடன் பெறுபவரிடமிருந்து பெறப்பட்ட எந்தவொரு பயன்பாட்டு கோரிக்கையையும் அனுமதிக்கவோ அல்லது நிராகரிக்கவோ கடன் வழங்குபவருக்கு முழுமையான உரிமை உண்டு.

(c) இந்த ஒப்பந்தத்தின் கீழ் அல்லது விதிமுறைகளின் கீழ் கடன் வழங்குபவர் கடன் பெறுபவருக்கு செலுத்த வேண்டிய அனைத்து பணமளிப்புகளும் முறையாக குறுக்கே கோடிட்ட மற்றும் 'பணம் பெறுபவர் மட்டும்' என்று குறிக்கப்பட்ட காசோலை/ டிமாண்ட் டிராப்ட் / பே ஆர்டர்/ மின்னணு நிதி பரிமாற்றம் மூலம் செய்யப்படும் மற்றும் அத்தகைய அனைத்து காசோலைகளுக்கும் கலெக்ஷன் கட்டணங்கள் ஏதேனும் இருந்தால், கடன் பெறுபவரால் ஏற்கப்பட வேண்டும்.

2.2 வட்டி மற்றும் வரிகள்:

(a) கடனுக்குப் பொருந்தும் வட்டி விகிதம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடியாகும். முழு கடனையும் வழங்குவதற்கு முன்பு கடன் வழங்குபவர் வட்டி விகிதத்தைக் குறைக்கும் அல்லது அதிகரிக்கும் பட்சத்தில், பொருந்தக்கூடிய வட்டி விகிதம், வழங்கப்பட்ட/ வழங்கப்பட வேண்டிய பகுதித்தொகைக்கு ஏற்ப மாறுபடும்.

- ஒரு கடனுக்கான மிதவை வட்டி விகிதம் என்பது வட்டி விகிதம் கடன் வழங்குபவரின் அதாவது SBFC இன் பிரதம கடன் விகிதத்துடன் (PLR) இணைக்கப்பட்டுள்ளது மற்றும் பிந்தையவற்றில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப மாறுபடும்.
- நிலையான வட்டி விகிதம் என்பது கடன் தவணைக் காலத்தின் தொடக்கத்தில் நிர்ணயிக்கப்பட்ட விகிதமாகும், மேலும் இது எதிர்பாராத சந்தை நிலைமைகளால் பாதிக்கப்பட்டால் தவிர கடன் தவணைக் காலம் முழுவதும் மாறாமல் இருக்கும்.
- இரட்டை விகித கடன் வட்டி இந்த ஒப்பந்தத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நிலையான விகித தவணைக் காலத்திற்கு நிலையான வட்டி விகிதத்தைக் கொண்டிருக்கும், அதன் பிறகு மிதவை வட்டி விகிதம் இந்த ஒப்பந்தத்தின் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளபடி மிதவை விகித தவணைக் காலத்திற்கு SBFC PLR உடன் இணைக்கப்படும்.

(b) கடன் வழங்குபவர், கடன் தவணைக் காலத்தின் போது ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1 மற்றும் அக்டோபர் 15 ஆம் தேதிகளில் அல்லது எந்த நேரத்திலும் அல்லது அவ்வப்போது தனது கொள்கை, சந்தை நிலைமைகள் மற்றும்/அல்லது பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் ஏதேனும் இருந்தால், தனது சொந்த விருப்பப்படி வட்டி விகிதத்தை மதிப்பாய்வு செய்து, தேவைப்பட்டால் மீட்டமைப்பார். வட்டியில் ஏற்படும் மாறுபாடு குறித்து கடன் வழங்குபவர் உரிய நேரத்தில் கடன் பெறுபவருக்குத் தெரிவிக்க முயற்சிப்பார்.

(c) வட்டி காலத்தின் மீதமுள்ள பகுதிக்கும், அதன் பிறகு ஒவ்வொரு அடுத்தடுத்த வட்டி காலத்திற்கும், மேலும் அத்தகைய திருத்தம் செய்யப்பட்டு கடன் வழங்குபவரால் தெரிவிக்கப்படும் வரை, கடன் பெறுபவர் விகிதாசார திருத்தப்பட்ட வட்டியை செலுத்த வேண்டும்.

(d) மத்திய அல்லது மாநில அரசு அல்லது வேறு எந்த அரசு அதிகாரியாலும் கடனுக்கான வட்டிக்கு விதிக்கப்படும் எந்தவொரு வரி (மற்றும்/அல்லது பிற கட்டணங்கள்) காரணமாக, கடன் வழங்குபவர் மத்திய அல்லது மாநில அரசுக்கு செலுத்திய அல்லது செலுத்த வேண்டிய தொகையை கடன் பெறுபவர் ஈடு செய்ய வேண்டும் அல்லது கடன் வழங்குபவருக்கு செலுத்த வேண்டும். கடன் வழங்குபவர் அவ்வாறு செய்யும்படி கேட்கும் போது, கடன் பெறுபவர் பணத்தை ஈடு செய்வார் அல்லது பணம் செலுத்துவார்

(e) கடன் ஒப்பந்தத்தின் கீழ் நடத்தப்படும் பரிவர்த்தனைகள்/செயல்பாடுகள்/சேவைகள் தொடர்பாக அரசு/வேறு ஏதேனும் தகுதிவாய்ந்த அதிகாரியால் விதிக்கப்படும்

அனைத்து வரிகள், கட்டணங்கள், தீர்வைகளையும் கடன் பெறுபவர் செலுத்த வேண்டியிருக்கும். விற்பனை வரி, கலால் வரி அல்லது வேறு எந்த வரிகள் மூலமாகவும், அல்லது இனிமேல் இந்த பரிவர்த்தனையின் மீது முன்தேதியிட்டு அல்லது எதிர்கால விளைவுடன் விதிக்கப்படும் எந்தவொரு அதிகரிக்கும் வரிகளாலும் EMI அதிகரிக்கப்படும் என்பதை கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார்.

2.3 வட்டி கணக்கீடு: EMI ஆனது பொருந்தக்கூடிய விகிதத்தில் வருடாந்திர விகிதங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட அசல் மற்றும் வட்டியை உள்ளடக்கியது மேலும் அது அடுத்த ரூபாய்க்கு ரவுண்ட் ஆஃப் செய்யப்படுகிறது. வட்டி மற்றும் பிற கட்டணங்கள் முந்நூற்று அறுபது நாட்களைக் கொண்ட ஒரு வருடத்திற்கான எளிய வட்டி முறையின் அடிப்படையில் கணக்கிடப்படும்.

2.4 கடன்தீர்ப்பு:

(a) பிரிவு 2.2 க்கு உட்பட்டு, கடன் பெறுபவர் கடன்தீர்ப்பு அட்டவணையின்படி கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். இருப்பினும், ஏதேனும் காரணத்திற்காக ஏதேனும் பகுதித்தொகை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டாலோ அல்லது முன்கூட்டியே பணம் வழங்கப்பட்டாலோ, கடனின் அனைத்து பகுதித்தொகைகளும் வழங்கப்பட்ட மாதத்திற்கு அடுத்த மாதத்தின் முதல் நாளே EMI தொடங்கும் தேதியாக இருக்கும்.

(b) மேலே உள்ள பிரிவு 2.4(a) மற்றும் கடன் திருப்பிச் செலுத்தும் அட்டவணை எவ்வாறு இருந்தபோதிலும், கடனின் திருப்பிச் செலுத்தும் விதிமுறைகளை அல்லது அதன் நிலுவைத் தொகையை மதிப்பாய்வு செய்வதற்கும் மறுதிட்டமிடுவதற்கும் கடன் வழங்குபவருக்கு எந்த நேரத்திலும் அல்லது அவ்வப்போது உரிமை உண்டு.

இருப்பினும், கடன் தீர்ப்பு அட்டவணையை மறு திட்டமிடுவதற்கு முன், கடன் வழங்குபவர் கடன் பெறுபவருக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும்.

(c) கடன் பெறுபவர், இந்த தேதியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் தனது வருமானம் குறித்த அறிக்கையை கடன் வழங்குபவருக்கு தாமாகவே அனுப்புவார். இருப்பினும், கடன் பெறுபவரிடம் அவரது வேலைவாய்ப்பு, வர்த்தகம், தொழில் அல்லது உத்தியோகம் தொடர்பான தகவல்/ஆவணங்களை எந்த நேரத்திலும் வழங்கும்படி கோருவதற்கு கடன் வழங்குபவருக்கு உரிமை உண்டு, மேலும் கடன் பெறுபவர் அத்தகைய தகவல்/ஆவணங்களை உடனடியாக வழங்க வேண்டும்.

(d) ஒரு EMI தொடர்பான பொருத்தமான பின் தேதியிட்ட காசோலையை (களை) அதன் வங்கியில், அத்தகைய EMI செலுத்த வேண்டிய தேதியில் அல்லது அதற்குப் பிறகு எந்த நேரத்திலும் சமர்ப்பிக்க கடன் வழங்குபவருக்கு உரிமை உண்டு.

(e) கடன் வழங்குபவர் எந்த காரணத்திற்காகவும், பின் தேதியிட்ட காசோலையின் செல்லுபடியாகும் காலம் முடிவதற்கு முன்பு, பிந்தைய தேதியிட்ட காசோலையை(களை) டெபாசிட் செய்யவில்லை என்றால் அல்லது எந்த காரணத்திற்காகவும், ECS/SI/ACH/NACH திருப்பிச் செலுத்தும் முறைக்கு இணங்க EMI-ஐப் பெறவில்லை என்றால், இது தொடர்பாக கடன் வழங்குபவர் கோரிக்கை வைத்த ஏழு (7) நாட்களுக்குள், புதிய பின்தேதியிட்ட காசோலை அல்லது ECS /SI/ACH/NACH அறிவுறுத்தல்கள், மேலே கூறப்பட்டுள்ளபடி, பணம் அளிக்கப்பட்டு, கடன் வழங்குபவர் EMI-க்கு சமமான தொகையைப் பெறுவதை உறுதிசெய்து, அந்தந்த முறைக்கேற்ப, கடன் பெறுபவர் கடன் வழங்குபவருக்கு அதே அளவு தொகைக்கான புதிய பின்தேதியிட்ட காசோலை(களை) வழங்க வேண்டும் அல்லது EMI-க்கு சமமான நிதியை கடன் வழங்குபவருக்கு பணம் பரிமாற்றுவதற்கான புதிய வழிமுறைகளை பணம் எடுக்கும் வங்கிக்கு வழங்க வேண்டும்.

(f) கடன் பெறுபவர் திருப்பிச் செலுத்துவதற்கான செல்லுபடியாகும் ECS/SI/ACH/NACH வழிமுறைகளை வழங்க ஒப்புக்கொள்கிறார். அத்தகைய அறிவுறுத்தல்கள் இல்லாத நிலையில், கடன் வழங்குபவருக்கு பின் தேதியிட்ட காசோலைகளை வசூல் செய்து வங்கியில் அளிக்க உரிமை உண்டு. செல்லுபடியாகும் ECS/SI/ACH/NACH செயல்படுத்தப்பட்டவுடன் அல்லது கடன் முடிவடைந்த 60 நாட்களுக்குள், எது முந்தையதோ அதுவரை, கடன் வழங்குபவர் தனது விருப்பப்படி, தேதியிட்ட காசோலைகளை அழித்து, கடன் பெறுபவருக்கு அதைப் பற்றி அறிவிக்கலாம்.

(g) அனைத்து பணம் செலுத்தல்களையும் தவறாமல் செலுத்துவதாகவும், தனது வங்கியாளர்களுக்கு பணம் செலுத்துவதை நிறுத்தவோ/காசோலைகளை திருப்பி அனுப்பவோ /ECS/SI/ACH/NACH-க்கு அறிவுறுத்த மாட்டார் என்றும் கடன் வழங்குபவரிடம் கடன் பெறுபவர் பொறுப்பேற்கிறார்.

மேலும் கடன் பெறுபவர் ECS/SI/ACH/NACH தொடர்பான அறிவுறுத்தல்களை ரத்து செய்யவோ அல்லது கடன் வாங்குபவருக்கு, பின் தேதியிட்ட காசோலையை (காசோலைகளை) அவற்றின் உரிய தேதிகளில் வங்கியில் அளிப்பதை நிறுத்தி வைக்குமாறு கடன் வழங்குபவருக்கு அறிவுறுத்தவோ கூடாது.

(h) கடன் பெறுபவர் வழங்கிய காசோலை அல்லது வேறு ஏதேனும் ஆவணத்துக்கு பணம் அளிக்கப்படாத பட்சத்தில் அல்லது கடன் பெறுபவர் தனது SI/ECS/ACH/NACH அறிவுறுத்தல்களை பணம் எடுக்கும் வங்கிக்கு ரத்து செய்யும் பட்சத்தில் அல்லது கடன் பெறுபவர் SI/ECS/ACH/NACH முறையில் பணம் எடுக்கும் வங்கிக்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தாலும், கடன் வழங்குபவர் சமப்படுத்தபட்ட மாதாந்திர தவணைகளுக்கு சமமான பணத்தைப் பெறவில்லை என்றால், கடன் பெறுபவர் அவர்/அது/அவர்கள் அருகிலுள்ள கடன் வழங்குபவரின் கிளை அலுவலகம் சென்று அந்தந்த மாதத்திற்கான நிலுவைத் தவணையை செலுத்த வேண்டும் என்றும், ECS/ACH/NACH இன் புதிய ஆணையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அல்லது கடன் பெறுபவர்(கள்) NEFT/RTGS மூலம் பணம் செலுத்தி அந்தந்த மாதத்தில் கடன் வழங்குபவருக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் ஒப்புக்கொள்கிறார்; தவறினால், அத்தகைய காசோலை/SI/ECS/ACH/NACH அல்லது வேறு ஏதேனும் ஆவணத்துக்கும் பணம் அளிக்கப்படாத பட்சத்தில், கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி கூடுதல் கட்டணத்துடன் EMI ஐ செலுத்த கடன் பெறுபவர்(கள்) பொறுப்பாவார்(கள்).

(i) கடன் பெறுபவர் வழங்கிய பணம் அளிக்கப்படாத காசோலைகள், ரத்து செய்யப்பட்ட ECS /SI/ACH/NACH அறிவுறுத்தல்கள் அல்லது அத்தகைய ECS/SI/ACH/NACH அறிவுறுத்தல்கள் ஆகியவற்றை மாற்றுவதோடு மட்டுமல்லாமல், கடன் வழங்குபவர் எந்தவொரு காரணத்திற்காகவும் EMI க்கு சமமான பணத்தை ஒரு டிமாண்ட் டிராப்ட் அல்லது பவுன்ஸ் செய்யப்பட்ட காசோலை/ECS/SI/ACH/NACH க்கு பதிலாக ரொக்கமாக செலுத்தவில்லை என்றால், கடனின் அந்த தவணைக்கான பணம் பெறும் தேதி வரை ஒப்பந்தத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தாமதக் கட்டணங்களை கடன் பெறுபவர் செலுத்த வேண்டியிருக்கும், மேலும் இது தொடர்பாக கடன் வழங்குபவருக்கு ஏற்படக்கூடிய சட்டக் கட்டணங்கள் உட்பட நியாயமான செலவு மற்றும் செலவுகளை கடன் வழங்குபவருக்கு திருப்பிச் செலுத்தவும் பொறுப்பாவார்.

மேற்கூறிய காசோலைகள் அல்லது பிற ஆவணங்கள் /SI/ECS/ACH/NACH ஆகியவற்றை வழங்குவது குறித்து கடன் வழங்குபவர் கடன் பெறுபவருக்கு எந்த அறிவிப்பு, நினைவூட்டல் அல்லது அறிவிப்பையும் வழங்க மாட்டார். இது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம், 1881 உடைய பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் கடன் வழங்குபவரின் உரிமைக்கும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் அதன் பிற உரிமைகளுக்கும் எந்தவித குந்தகமும் இல்லாமல் இருக்கும். இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடனளிப்பவருக்கு செலுத்த வேண்டிய தொகையிலிருந்து எந்தவொரு தொகையும் செட் ஆஃப் செய்யவோ, நிறுத்தி வைக்கவோ அல்லது கழிக்கவோ அவருக்கு உரிமை இல்லை மேலும் அவ்வாறு செய்ய மாட்டேன் என்று ஒப்புக்கொள்கிறார்.

i) கடன் குறித்த சமப்படுத்தப்பட்ட மாதாந்திர தவணைகளுக்காக கடன் பெறுகுபவர் வழங்கிய பின் தேதியிட்ட காசோலைகள்/ECS/SI/ACH/NACH ஆகியவற்றை, கடன் பெறுபவர் தனது விருப்பப்படி, இடமாற்றம் இடைப்பரிமாற்றம் செய்ய உத்தேசித்துள்ள மற்றொரு வங்கிக் கணக்கில்

சமப்படுத்தப்பட்டமாதாந்திர தவணைகளின் எண்ணிக்கைக்கு சமமான தொகைக்கு வரைவு செய்த பின் தேதியிட்ட காசோலைகள்/ECS/SI/ACH/NACH வழங்குவதன் மூலம் இடமாற்றம் இடைப்பரிமாற்றம் செய்துகொள்ளலாம், இது கடன் வழங்குபவரால் தீர்மானிக்கப்பட்டு கடன் பெறுபவருக்கு அறிவிக்கப்படும் இடமாற்றக் கட்டணங்கள் ("இடமாற்றக் கட்டணங்கள்") செலுத்தப்படுவதற்கு உட்பட்டதாகும்.

இது தொடர்பாக ஏற்படும் எந்தவொரு செலவையும் கடன் பெறுபவர் ஏற்க வேண்டும்.

j) கடன் பெறுபவர் கொடுத்த பின் தேதியிட்ட காசோலைகளை டெபாசிட் செய்ய வேண்டாம் என்று கடன் வழங்குபவருக்கு எந்த அறிவுறுத்தல்களையும் வழங்க மாட்டார் என்பதையும் கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார்.

கடன் வழங்குபவரின் ஒப்புதல் இருந்தால் தவிர, சமப்படுத்தப்பட்ட மாதாந்திர தவணைகளை செலுத்துவதற்கான ECS/SI/ACH/NACH முறையில் பங்கேற்க அவரது/அவர்களின் ஒப்புதல் இந்த ஒப்பந்தத்தின் காலப்பகுதியில் ரத்து செய்யப்படாது என்பதற்கு கடன் பெறுபவர் மேலும் உறுதியளிக்கிறார். கடன் பெறுபவர் இந்த ECS/SI/ACH/NACH முறையில் பங்கேற்க அவரது/அதன்/அவர்களின் ஒப்புதலை ரத்து செய்தால், கடன் வழங்குபவரை ஏமாற்றுவதற்காகவே இது செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படலாம். மேலும், இந்திய தண்டனைச் சட்டம், 1860 மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள வேறு எந்தச் சட்டத்தின் கீழும் குற்றவியல் நடவடிக்கைக்கு கடன் பெறுபவர் பொறுப்பேற்க வேண்டும்.

k) கடன் பெறுபவரால் கடனுக்காக செலுத்த கடமைப்பட்ட எந்தவொரு தொகையும் கடன் பெறுபவரின் கலைப்பு அல்லது நிர்வாகத்தை மேற்கொள்ளலின் போது தவிர்க்கப்பட்டால் அல்லது ஒதுக்கி வைக்கப்பட்டால் அல்லது மற்றபடி, இந்த ஒப்பந்தத்தின் நோக்கத்திற்காக, அத்தகைய தொகை திருப்பித் தரப்படும்போது அல்லது கடன் வழங்குபவரால் கடன் பெறுபவருக்கோ அல்லது வேறு எந்த உரிமைகோருபவருக்கோ திருப்பித் தரப்படும்போது அது செலுத்தப்பட்டதாகக் கருதப்பட மாட்டாது.

2.5 EMI செலுத்துவதில் தாமதங்கள்:

(a) உரிய தேதியில் EMI-ஐ தவறாமல் செலுத்த வேண்டிய கடமை கடன் பெறுபவருக்கு உள்ளது குறித்து எந்த அறிவிப்பும், நினைவூட்டலும் அல்லது தகவலும் வழங்கப்பட மாட்டாது. EMI-ஐ உடனடியாகவும் முறையாகவும் செலுத்துவதை உறுதி செய்வது கடன் பெறுபவரின் முழுப் பொறுப்பாகும்.

(b) EMI செலுத்துவதில் ஏற்படும் தாமதம், இந்த ஒப்பந்தத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தாமதக் கட்டணங்களைச் செலுத்த கடன் பெறுபவரை பொறுப்பாக்கிவிடும்.

அத்தகைய சூழ்நிலையில், கடன் பெறுபவர் அதற்கு நேரும் கட்டணங்கள் மற்றும் செலவுகளை கடன் வழங்குபவருக்கு செலுத்த வேண்டியிருக்கும்.

(c) இந்த ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படும் கடன் வணிக நோக்கத்திற்காக என்பதை கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார், மேலும் வட்டி வசூலிப்பது தொடர்பான வட்டி அல்லது பிற சட்டங்களின் கீழ் தனக்குக் கிடைக்கக்கூடிய எந்தவொரு பாதுகாப்பையும் இதன் மூலம் வெளிப்படையாகத் தள்ளுபடி செய்கிறார்.

2.6 முன்கூட்டி பணம் செலுத்துதல்:

(a) கடன் வழங்குபவர் தனது சொந்த மற்றும் முழுமையான விருப்பப்படி, முன்கூட்டியே பணம் செலுத்துதல் உட்பட ஆனால் அவை மட்டும் அல்லாமல் அட்டவணையில் ("முன்கூட்டியே பணம் செலுத்துதல்") குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க, கடன் பெறுபவரின் வேண்டுகோளின் பேரில் EMI-களை முடுக்கிவிட அல்லது கடனை முன்கூட்டியே செலுத்த அனுமதிக்கலாம். ஆனால், கடன் வழங்குபவரால் வழங்கப்படும் சுழலும் வசதியின் விஷயத்தில், கடன் பெறுபவர், கடன் வழங்குபவரின் முன் ஒப்புதலுடன் மற்றும் கடன் வழங்குபவர் பரிந்துரைக்கக்கூடிய அத்தகைய விதிமுறைகளுக்கு உட்பட்டு, எந்தவொரு பயன்பாட்டின் அசல் தொகையையும் எந்தவொரு முன்கூட்டியே பணம் செலுத்துவதற்கான கட்டணங்களும் இல்லாமல் முன்கூட்டியே பணம் செலுத்தலாம்

(b) எந்தவொரு சூழ்நிலையிலும் கடன் வழங்குபவர் முன்கூட்டியே பணம் செலுத்தலுக்கான கட்டணங்களைத் தள்ளுபடி செய்ய மாட்டார். கடன் வழங்குபவர் தனது சொந்த விருப்பப்படி, கடன் தவணைக் காலத்தின் போது, எந்த நேரத்திலும், அவ்வப்போது தனது கொள்கையின்படி முன்கூட்டியே பணம் செலுத்தளுக்கான கட்டணங்களைத் திருத்திக்கொள்ள உரிமை உண்டு. முன்கூட்டியே பணம் செலுத்தலுக்கான கட்டணங்களில் உள்ள மாறுபாடு குறித்து கடன் வழங்குபவர் உரிய நேரத்தில் கடன் பெறுபவருக்குத் தெரிவிக்க முயற்சிப்பார்.

(c) இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி மற்றும் EMI தொடங்கும் தேதியில் மட்டுமே முன்கூட்டியே பணம் செலுத்தலை செய்யலாம்.

கடன் பெறுபவர் தொடர்புடைய EMI தொடங்கும் தேதிக்கு முன்னர் கடன் வழங்குபவருக்கு ஏதேனும் தொகையைச் செலுத்தினால், கடன் வழங்குபவர் அதை பொருத்தமாகக் கருதும் வகையில் கையகப்படுத்திக்கொள்ள உரிமை உண்டு, மேலும் அத்தகைய தொகையைச் செலுத்துவதற்கான கிரெடிட்டை கடன் வழங்குபவர் தொடர்புடைய EMI தொடங்கும் தேதியில் மட்டுமே கடன் பெறுபவருக்கு தருவார். இந்தக் கடனின் கீழ், கடன் பெறுபவருக்குக் கிடைக்கும் சுழலும் லைன் ஆஃப் கிரெடிட் தவிர, வேறு எந்தத் தொகையும் முன்கூட்டியே செலுத்தப்படக்கூடாது

2.7 பணம் வழங்கலுக்கான இறுதித் தேதிகள்: இதில் உள்ள முரண்பாடான விஷயங்கள் எதையும் பொருட்படுத்தாமல், ஒப்புதல் கடிதத்தின் தேதியிலிருந்து ஆறு (6) மாதங்களுக்குள் அல்லது கடன் வழங்குபவர் அவ்வப்போது பரிந்துரைக்கும் பிற தேதிக்குள் கடன் முழுமையாக எடுக்கப்படாவிட்டால், கடன் வழங்குபவர் கடனை இடைநிறுத்தலாம் அல்லது ரத்து செய்யலாம்.

*கடன் வழங்குபவர்கள் எந்தவொரு காரணத்தையும் கூறாமல் கடன் வசதியையோ அல்லது அதன் எந்தப் பகுதியையோ நிறுத்தி வைக்க மற்றும்/அல்லது ரத்து செய்ய தங்களிடம் உரிமைகளை வைத்திருக்கிறார்கள்.*

2. 8 சமப்படுத்தப்பட்ட மாதாந்திர தவணைகளை மாற்றியமைத்தல் மற்றும் மறு திட்டமிடல்:

மேலே உள்ள பிரிவு 2.7 க்கு எந்தவித குந்தகமும் இல்லாமல், ஒப்புதல் கடிதத்தின் தேதியிலிருந்து ஆறு {6) மாதங்களுக்குள் கடன் பெறுபவர் கடனைப் பெறவில்லை என்றால், EMI மாற்றப்பட்டு மீண்டும் திட்டமிடப்படலாம், கடன் வழங்குபவர் தனது சொந்த மற்றும் முழுமையான விருப்பப்படி முடிவு செய்வார், மேலும் அட்டவணையிலோ அல்லது முந்தைய கடன்தீர்ப்பு அட்டவணையிலோ முரணாக உள்ள எதையும் கணக்கில் கொள்ளாமல், கடன் தொகைக்கான கடன்தீர்ப்பு முடிவு செய்யும் விதத்திலும் அந்த அளவிற்கும் புதிய கடன்தீர்ப்பு அட்டவணையின்படி இருக்கும்.

2.9 கூட்டாகவும் தனித்தனியாகவும் உள்ள கடன் பெறுபவர்களின் பொறுப்பு: ஒன்றுக்கு மேற்பட்ட கடன் பெறுபவர்கள் இருக்கும் பட்சத்தில், இந்தக் கடன் அல்லது வேறு ஏதேனும் கடன் அல்லது கடன்கள் தொடர்பாக கடன் வாங்குபவருடன் அத்தகைய கடன் பெறுபவர்களால் செயல்படுத்தப்பட்டுள்ள அல்லது செயல்படுத்தக்கூடிய கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும், இந்த ஒப்பந்தம் மற்றும்/அல்லது வேறு ஏதேனும் ஒப்பந்தங்கள் மற்றும் ஆவணங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் பின்பற்றுவதற்கும் கடன் பெறுபவர்களின் பொறுப்பு என்பது கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆனது என்பதை கடன் பெறுபவர்கள்

ஒப்புக்கொள்கிறார்கள்.

2.10 பொருந்தக்கூடிய சட்டத்திற்கு உட்பட்டு, கடன் பெறுபவர் ஏதேனும் திட்டத்தைத் தேர்வுசெய்தால் அல்லது அவரது முதலாளியிடமிருந்து ஏதேனும் சலுகையை ஏற்றுக்கொண்டு, ஓய்வு பெறுவதற்கு முன்னர் வேலையை ராஜினாமா செய்தாலோ அல்லது அல்லது முதலாளி எந்தவொரு காரணத்திற்காகவும் அவரை வேலையில் இருந்து நீக்கினாலோ அல்லது கடன் பெறுபவர் எந்தவொரு காரணத்திற்காகவும் ஒரு முதலாளியின் சேவையிலிருந்து ராஜினாமா செய்தாலோ அல்லது ஓய்வு பெற்றாலோ, இந்த ஒப்பந்தத்திலோ அல்லது எந்தவொரு கடிதத்திலோ அல்லது ஆவணத்திலோ உள்ள முரண்பாட்டைப் பொருட்படுத்தாமல், கடன்தொகையின் முழு நிலுவையில் உள்ள அசல் தொகை மற்றும் நிலுவையில் உள்ள வட்டி மற்றும் பிற நிலுவைத் தொகைகள் கடன் பெறுபவரால் அத்தகைய திட்டம் அல்லது சலுகையின் கீழ் முதலாளியிடமிருந்து பெறக்கூடிய தொகையிலிருந்து அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப எந்தவொரு வேலை முடிவுப் பலனிலிருந்தும் கடன் வழங்குபவருக்கு செலுத்தப்படும். இருப்பினும், கடனை முழுமையாகத் திருப்பிச் செலுத்துவதற்கு மேற்கூறிய தொகை போதுமானதாக இல்லாவிட்டால், கடன் வழங்குபவருக்குச் செலுத்த வேண்டிய மீதமுள்ள தொகை, கடன் வழங்குபர் தனது சொந்த மற்றும் முழுமையான விருப்பப்படி முடிவு செய்யும் அத்தகைய முறையில் கடன் பெறுபவரால் அது செலுத்தப்படவேண்டும், மேலும் பிரிவு 2.4 மற்றும் அட்டவணை மற்றும்/அல்லது கடன் கடன்தீர்ப்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எதையும் பொருட்படுத்தாமல், கடன் பெறுபவரால் அதற்கேற்ப பணம் செலுத்தப்படவேண்டும். இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, கடன் பெறுபவர் இதன் மூலம் கடன் வழங்குபவருக்கு தனது முதலாளியிடமிருந்து நேரடியாக விண்ணப்பிக்கவும், தொடர்பு கொள்ளவும், குறிப்பிட்ட தொகைகளைப் பெறவும் அதிகாரம் அளிக்கிறார்.

2.11 கடன் வழங்குபர் கடனை மீட்டழைத்தல்:

a. கடன் வழங்குபவர் கடனை ஓரளவு அல்லது முழுமையாக மீட்டழைக்கலாம் என்பதை கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார், இதில் ஆபத்து உணர்வில் ஏற்படும் மாற்றம், கடன் தொகை ஒப்புதல் அளித்த கடன் தொகை வரம்பை எட்டிவிட்டது அல்லது மீறிவிட்டது, கடன் பெறுபவரால் கடன் வழங்குபவருக்கு கிடைக்கப்பெறும் பிணையங்களின் மதிப்பீடு, கணக்கீடு/மறு கணக்கீடு காரணமாக மாற்றத்திற்கு உள்ளாகுதல் அல்லது எந்த நேரத்திலும், இந்த ஒப்பந்தத்தில் கருதப்படும் எந்தவொரு கடமைகளையும் நிறைவேற்றுவது அல்லது கடனில் தனது பங்களிப்பாக நிதியளிப்பது அல்லது பராமரிப்பது சட்டவிரோதமானது அல்லது சட்டவிரோதமானதாக மாறக்கூடியாது மற்றும் கடன் வழங்குபவர் கடனை மீட்டழைக்க / கிடைக்கக்கூடிய பிணையம்/ கூட்டுப்பிணையத்தை அதிகரிக்ககோரிக்கை தேவைப்படும் சூழ்நிலைகளில், அனுமதிக்கப்பட்டால், கடன் வழங்குபவர் கடன் தொகைக்கு எதிராக போதுமான பிணையம் / கூட்டுப்பிணையம் கிடைப்பதை உறுதி செய்வதற்காக கடன் பெறுபவர் அனுமதிக்கப்பட்ட பிணையங்களின் பட்டியலிலிருந்து அந்த நாளில் நடைமுறையில் உள்ள பிணையங்களை வழங்கலாம்.

b. கடன் வழங்குபவர் தனது விருப்பப்படி, கடனை(களை) மீட்டழைக்கலாம் என்பதை கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார். ஒவ்வொரு கடனுக்கும் திருப்பிச் செலுத்தும் அட்டவணை(கள்), கடனின் கீழ் செலுத்தப்பட்ட தொகைகளை அல்லது முழு கடனையும் மீட்டழைக்கவும், கடன் இருப்பு(களின்) கீழ் கடன் வழங்குபவருக்கு செலுத்த வேண்டிய தொகைகளை செலுத்தக் கோருவதற்கும் கடன் வழங்குபவரின் உரிமைக்கு எந்தவித குந்தகமும் இல்லாமல் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

c. அறிவிப்பு காலம் காலாவதியானவுடன், அல்லது எந்த அறிவிப்பும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றால், கடன் ரத்து செய்யப்படும், மேலும் கடனின் கீழ் செலுத்த வேண்டிய அனைத்து தொகைகளும், அந்தந்த நிலைக்கேற்ப, கடன் பெறுபவர் உடனடியாக கடன் வழங்குபவருக்கு திருப்பிச் செலுத்த வேண்டியதாக மாறும், மேலும் பிணையம் வழங்குநரால் வழங்கப்பட்ட பிணையம் உடனடியாக அமல் படுத்துவதற்கு உரியதாகும்.

பிரிவு- 3: முன்னோடி நிபந்தனைகள்

3.1 கடன் அல்லது அதன் எந்தவொரு பகுதித்தொகையையும் வழங்குவதற்கான முன்னோடி நிபந்தனைகள் பின்வருமாறு:

உரிமை கொண்டிருப்பது: கடன் பெறுபவர் சொத்து மீதும் அதனைக் கொண்டு வழங்கப்படும் வேறு எந்தப் பிணையத்துக்கும் முழுமையான, தெளிவான மற்றும் சந்தைப்படுத்தக்கூடிய உரிமையைக் கொண்டிருக்க வேண்டும், மேலும் சொத்து மற்றும் இதன் கீழ் வழங்கப்படும் வேறு எந்தப் பிணையமும் முற்றிலும் வில்லங்கம் அற்றதாக, எந்தவொரு பொறுப்பு மற்றும் முன் அடமானங்களில் இருந்தும் விடுபட்டதாகவும் இருப்பதை உறுதி செய்யவேண்டும்.

கடன் பெறுபவர், பிணையத்தின் பொருளாக இருக்கும் சொத்தின் தெளிவான, சந்தைப்படுத்தக்கூடிய மற்றும் வில்லங்கம் அற்றதாக உரிமை கொண்டிருப்பதற்கு சான்றிதழை வழங்க வேண்டும்.

3.2 பணம் வழங்குவதற்கான பிற நிபந்தனைகள்: இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் அல்லது அதன் எந்தவொரு பகுதியையும் வழங்குவதற்கான கடன் வழங்குபவரின் கடமை பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது:

(a) தவறுகை நிகழ்வு: எந்த ஒரு தவறுகை நிகழ்வும் நிகழ்ந்திருக்கக் கூடாது.

(b) வழங்கப்பட்ட பணத்தை பயன்படுத்தியதற்கான சான்றுகள்: கடன் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கடன் மற்றும்/அல்லது அதன் பகுதித்தொகையின் எந்தவொரு வழங்கலும், கோரிக்கையின் போது, கடன் பெறுபவரின் ஒரே மற்றும் பிரத்யேக நோக்கத்திற்காக உடனடியாக கடன் பெறுபவரால் கோரப்பட வேண்டும் மேலும், கடன் வழங்குபவருக்கு திருப்திகரமாக இருக்கும் வகையில், கடன் வழங்குபவரின் கடன் அல்லது அதன் எந்தவொரு தொகையையும் பயன்படுத்துவதற்கான முன்மொழியப்பட்ட ஆதாரத்தை கடன் பெறுபவர் சமர்ப்பிக்க வேண்டும்.

(c) அசாதாரண சூழ்நிலைகள்: இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் பெறுபவர் தனது கடமைகளை நிறைவேற்றுவதை சாத்தியமற்றதாக்கும் அசாதாரண அல்லது பிற சூழ்நிலைகள் எதுவும் ஏற்பட்டிருக்கக்கூடாது.

(d) நிலுவையில் உள்ள சட்ட நடவடிக்கைகள்: கடன் பெறுபவரின் நிதி மற்றும் பிற விவகாரங்களில் குறிப்பிடத்தக்க பாதகமான விளைவை ஏற்படுத்தக்கூடிய அல்லது இந்த ஒப்பந்தத்தின் செல்லுபடியாகும் தன்மை அல்லது செயல்திறனை அல்லது அதன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கேள்விக்குள்ளாக்கக்கூடிய எந்தவொரு நடவடிக்கை, வழக்கு, நடவடிக்கைகள் அல்லது விசாரணையும் நிலுவையில் இல்லை அல்லது கடன் பெறுபவருக்கு எதிராக எந்தவொரு நீதிமன்றத்திலோ அல்லது அரசாங்க ஆணையத்திலோ அல்லது வேறு எந்த தகுதிவாய்ந்த ஆணையத்திலோ நிலுவையில் இல்லை என்று கடன் பெறுபவர் ஒரு பிரகடனம் வழங்கியிருக்க வேண்டும்.

(e) இந்த ஒப்பந்தத்தின் கீழ் சொத்து/வேறு எந்தப் பிணையத்திற்கும் கடன் பெறுபவருக்கு தெளிவான மற்றும் சந்தைப்படுத்தக்கூடிய உரிமை உள்ளது, நியாயமான சந்தேகங்கள் மற்றும் வில்லங்கங்கள் இல்லாமல், கடன் பெறுபவர் எந்தவொரு ஆபத்துக்கும் எதிராக கடன் வழங்குபவருக்கு இழப்பீடு வழங்குவார் மற்றும் இழப்பீடு வழங்குவதை தொடர்வார் என்றும், மேலும் கடன் பெறுவது அல்லது கடன் ஒப்பந்தத்தின் கீழ் கடமைகளைப் பாதுகாக்க பிணையத்தை வழங்குவது எந்தவொரு கடன் பெறுதல், பிணையத்தை வழங்குதல்

அல்லது அதன் மீதான இதே போன்ற வரம்பு பிணைப்பை மீறுவதற்கு வழிவகுக்காது என்பதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் பிரகடனம்/பொறுப்பேற்பு செய்திருக்க வேண்டும். கடந்த நிதியாண்டின் தேதியிலிருந்து, கடன் பெறுபவரின் வணிகம், நிலை (நிதி அல்லது வேறு), செயல்பாடுகள், செயல்திறன், சொத்துக்கள் அல்லது வாய்ப்புகளில் எந்தவொரு குறிப்பிடத்தக்க பாதகமான மாற்றமும் இல்லை என்பதை கடன் பெறுபவர் மேலும் உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.

(f) கடன் பெறுபவர், கடன் வழங்குபவருக்கு ஆதரவாக கடன் தொகைக்கான ஒரு பணப் பத்திரம் அல்லது டிமாண்ட் பிராமிசரி நோட் எழுதி வழங்கியிருக்க வேண்டும்.

(g) கடன் பெறுபவர் தனது சொந்த செலவில் சொத்து அல்லது கடன் வழங்குபவருக்குத் தேவையான வேறு ஏதேனும் காப்பீட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை விரிவான மற்றும் கூட்டு காப்பீட்டுக் கொள்கையைப் பெற்றிருக்க வேண்டும். காப்பீட்டுக் கொள்கைக்கான தொகையானது சொத்து மற்றும் பிற பிணையத்தின் கட்டமைப்பு மதிப்பை உள்ளடக்கிய தொகை அல்லது கடன் தொகை, இதில் எது குறைவாக இருக்கிறதோ அந்தத் தொகைக்கு இருக்கவேண்டும். கடன் பெறுபவர் காப்பீட்டுக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் வழங்குபவரின் உரிமையை (இழப்புக்கு பணம் பெறுபவராக) பெறுவார், இது கடன் வழங்குபவருக்கு பாலிசியின் வருமானத்தில் முதல் கோரிக்கை இருக்கும் என்பதை உறுதிப்படுத்துகிறது மற்றும் அந்தக் பாலிசியின் உண்மையான நகலை கடன் வழங்குபவருக்கு வழங்க வேண்டும்.

(h) கடன் பெறுபவரின் சமீபத்திய தணிக்கை செய்யப்பட்ட மற்றும் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கைகளின் உண்மை நகலை கடன் பெறுபவர் வழங்க வேண்டும்.

(i) கடன் வழங்குபவர் கோரினால், கடன் வழங்குபவரின் திருப்திக்கு ஏற்ப கடன் பெறுபவர் ஒரு உத்தரவாதத்தை வாங்கியிருக்க வேண்டும்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள அனைத்து முன்னோடி நிபந்தனைகளும் முறையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதையும், தொடர்புடைய முதல் முன்னோடி நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டதற்கான சான்றுகள் ஆவணங்களைப் பெற்று, அது கடன் வழங்குபவர் திருப்தி அடையும்படி இருந்தால், கடன் வழங்குபவர் தனது சொந்த விருப்பப்படி, கடன் பெறுபவரின் கணக்கிலோ அல்லது பணம் வழங்கல் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிலோ பகுதித்தொகை I கடனை வழங்கலாம்.

(j) ILO ஒப்பந்தங்கள், ESG இடர் மதிப்பீடு மற்றும் அறநெறியான தரநிலைகளுடன் இணங்குதல்: கடன் பெறுபவர் இதன் மூலம் அனைத்து பொருந்தக்கூடிய சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) ஒப்பந்தங்களையும் கடைப்பிடிப்பதற்கும், அதன் செயல்பாடுகளுடன் தொடர்புடைய சுற்றுச்சூழல், சமூகம் சார்ந்த, தொழிலாளர் மற்றும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு அபாயங்களை முழுமையாக மதிப்பிடுவதற்கும் உறுதியளிக்கிறார்.

கடன் பெறுபவர் அனைத்து அறநெறி, சட்ட மற்றும் ஒழுங்குமுறை தரநிலைகளுடன் முழுமையாக இணங்குவதை உறுதிசெய்து, எந்தவொரு மீறல்கள் அல்லது தவறான நடத்தைகளையும் கண்டறிந்து, தடுக்க மற்றும் பதிலளிக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பார்.

கடன் வழங்குபவரின் கொள்கைகளால் விலக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை அல்லது ஈடுபடமாட்டார் என்று கடன் பெறுபவர் மேலும் உத்தரவாதம் அளிக்கிறார், இவை மட்டும் என்ற வரையறை இல்லாமல் இதில் சர்வதேச அல்லது உள்ளூர் சட்டங்களை மீறுதல், சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை சமரசம் செய்தல், பொது சுகாதாரம் அல்லது பாதுகாப்பை ஆபத்தில் ஆழ்த்துதல் அல்லது மனித உரிமைகளை மீறுதல் ஆகியவை அடங்கும்.

பிரிவு - 4 : பிணைய வட்டி

4.1 கடன்தொகைக்கு கடன்தீர்ப்பு கணக்கிடுதல், வட்டி, கட்டணங்கள், உறுதிப்பாட்டுக் கட்டணங்கள், அபராதக் கட்டணங்கள், பவுன்ஸ் ஆன காசோலை கட்டணங்கள், இந்தியப் பத்திரமயமாக்கல் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணையத்தின் மீதான சட்டஉரிமைகான மத்திய பதிவேடு (CERSAI) மற்றும் கம்பெனிப் பதிவாளர் (ROC) பிணையத்தின் மீது சட்ட உரிமையை உருவாக்குவதற்கான கட்டணங்கள் (இங்குள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி), மற்றும் விலைகள் மற்றும் இந்த ஒப்பந்தம் அல்லது வேறு ஏதேனும் ஒப்பந்தங்களின் கீழ் செலுத்த வேண்டிய அனைத்து பிற தொகைகளும், சொத்தின் மீது கடன் வழங்குபவருக்குச் சாதகமாக அடமானம் வைப்பதன் மூலம், அதன் மீது கட்டப்பட்ட/கட்டப்படவுள்ள அனைத்து தற்போதைய மற்றும் எதிர்கால கட்டமைப்புகள் மற்றும் கடன் வழங்குபவர் கோரக்கூடிய பிற சொத்துக்கள் மற்றும் சொத்துக்கள், கடன் வழங்குபவர் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில், முதல் மற்றும் பிரத்தியேக கட்டணத்தால் பாதுகாக்கப்படும் என்பதை கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார்.

**4.2** கடன் வழங்குபவர் தேவையென தெரிவித்தால், கடன் வழங்குபர் இங்கு இணைத்துள்ள வடிவத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துதல் மற்றும் பணம் செலுத்துதல், வட்டி, சேவைக்கட்டணங்கள், ஒதுக்கீடு கட்டணங்கள், செலவுகள், இதர கட்டணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் வழங்குபவருக்கு செலுத்த வேண்டிய அனைத்து பிற தொகைகளுக்கும் பிணையமாக இருக்கும் நிபந்தனையற்ற மற்றும் மாற்ற முடியாத உத்தரவாதத்தை (தனிப்பட்ட/நிறுவன) மூன்றாம் தரப்பினரிடமிருந்து ("உத்தரவாதம் அளிப்பவர்") கடன் பெறுபவர் பெறலாம்.

**4.3** கடனைப் பெறுவதற்காக கடன் பெறுபவர் உருவாக்க வேண்டிய அடமான வகை அல்லது வேறு ஏதேனும் பிணையம் மற்றும்/அல்லது கூடுதல் பிணையம் (பட்டியலிடப்பட்ட / பட்டியலிடப்படாத நிறுவனங்களின் 100% பங்குகளை ஈடு வைத்தல் மற்றும்/அல்லது அனைத்து கூட்டாண்மை உரிமைகள் மீதும் அடமானத்தின் மூலம் ஏற்படுத்தும் பொறுப்பு உட்பட, அதாவது தற்போதைய மற்றும் எதிர்கால கூட்டாண்மை உரிமை, சொத்துரிமை மற்றும் தொடர்புடைய கூட்டாளர்களின் உடமை உரிமை ஆகியவை கடன் வழங்குபவருக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கவை) மற்றும் மேற்கூறிய அனைத்துத் தொகைகளையும் தனது சொந்த விருப்பப்படி தீர்மானிக்க கடன் வழங்குபவருக்கு உரிமை உண்டு. மேலும், கடன் வழங்குபவருக்குத் தேவைப்படும் ஆவணங்களை உருவாக்கி முறையாகச் செயல்படுத்த கடன் பெறுபவர் கடமைப்பட்டுள்ளார். சொத்து தொடர்பாக பிரிவு 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள விவர அறிக்கைகள் மற்றும் உத்தரவாதங்கள், இந்த பிரிவு 4.3 இன் படி வழங்கப்படும் எந்தவொரு பிணையத்துக்கும் ஏற்ற மாற்றங்களுடன் பொருந்தும் என்றும், இந்த பிரிவு 4.3 இன் படி வழங்கப்படும் எந்தவொரு பிணையத்துக்கும் கடன் பெறுபவரால் வழங்கப்பட்டதாகக் கருதப்படும் என்றும் கடன் பெறுபவர் மேலும் ஒப்புக்கொள்கிறார்.

**4.4** கடனைப் பெறுவதற்காக கடன் பெறுபவர் எந்தவொரு பாண்டு(கள்) அல்லது பிராமிசரி நோட்களையும், கடன் வழங்குபவரால் கோரப்படும் பிற ஆவணங்கள், பவர் ஆஃப் அட்டர்ணி மற்றும் ஒப்பந்தங்களையும் நிறைவேற்ற வேண்டும்.

**4.5** கடன் வழங்குபவர் மற்றும்/அல்லது உத்தரவாததாரரிடமிருந்து கடன் வழங்குபவரின் கோரிக்கையின் பேரில் தனித்தனியாக, இப்போது

அல்லது எதிர்காலத்தில் எடுக்கப்படும் எந்தவொரு பிணையங்களும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பிணையங்களாகக் கருதப்படும். கடன் வழங்குபவர் தனது உரிமையைப் பாதுகாக்க வழங்கிய பிணையங்களை மறுமதிப்பீடு செய்யும்போது, கடன் வழங்குபவர் மற்றும்/அல்லது உத்தரவாததாரர் கூடுதல்/மாற்று ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணையத்தை(களை) கோருவார், இது இந்த ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படும் பிணையத்தின் ஒரு பகுதியாகும்.

**4.6** கடன் பெறுபவர் அத்தகைய பிற பிணையங்களை கடன் வழங்குபவருக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்திலும் வடிவத்திலும் வழங்க உறுதியளிக்கிறார், மேலும் கடன் வழங்குபவர் நிர்ணயித்த நேரத்திற்குள் அதை வழங்குவார்.

